❖ <u>கூட்டுறவு வங்கிகளில் குறுகியகால பயிர்க்கடன்களை மத்திய காலக் கடன்களாக மாற்ற உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்</u>
❖ <u>கூட்டுறவு வங்கிகள் வைப்புத்தொகை சேகரித்தல் இயக்கத்தை முனைப்புடன் மேற்கொள்ள வேண்டும்.</u>

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி **அம்மா** அவர்களின் ஆணையின்படி மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.**செல்லூர் கே. ராஜு** அவர்களின் தலைமையில் (இன்று) 27.2.2013 தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றிய கூட்ட அரங்கில் அனைத்து மண்டல இணைப்பதிவாளர்கள் மற்றும் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளின் செயலாட்சியர்களின் ஆய்வுகூட்டம் நடைபெற்றது.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இக்கூட்டத்தில் கலந்துகொண்டு அலுவலர்களுக்கு அறிவுரை வழங்கினார்கள்.

கூட்டுறவுத்துறை தமிழ்நாட்டில் உள்ள அடித்தட்டு மக்கள் முதல் அனைத்துத் தரப்பு மக்களுக்கும் தேவையான உதவிகளை செவ்வனே செய்து வருகிறது. இந்த நிதியாண்டு முடிவடையவுள்ள நிலையில் கூட்டுறவுத்துறை மானியக் கோரிக்கையின்போது அறிவிக்கப்பட்ட 21 அறிவிப்புகள் மீதான முன்னேற்றம் குறித்து ஆய்வு மேற்கொண்டு எஞ்சியுள்ள பணிகளை விரைந்து முடிக்குமாறு அறிவுரை வழங்கினார்கள்.

நடப்பாண்டில் ஏழை, நடுத்தர விவசாயிகளுக்கு குறுகிய காலப் பயிர்க் கடன் ரூ.4000 கோடி அளவிற்கு வழங்கக் குறியீடு நிர்ணயிக்கப்பட்டதில் இதுவரை ரூ.3566.23 கோடி அளவிற்கு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் மூலம் கடனுதவி வழங்கப்பட்டுள்ளது. இப்பயிர்க் கடனில் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியின உறுப்பினர்களுக்கு ரூ.800 கோடி அளவிற்கு கடன் வழங்க குறியீடு நிர்ணயிக்கப்பட்டதில் ரூ.580.63 கோடி இதுவரை வழங்கப்பட்டுள்ளன.

முதலீட்டுக் கடனாக ரூ.300 கோடி வழங்கக் குறியீடு நிர்ணயிக்கப்பட்டதில் இதுவரை ரூ.201.13 கோடி அளவிற்கு கடன்கள் வழங்கப்பட்டுள்ளன. விவசாயிகளின் விளை பொருள்கள் மீதான தானிய ஈட்டுக் கடன் ரூ.185 கோடி அளவிற்கு வழங்கக் குறியீடு நிர்ணயிக்கப்பட்டதில் இதுவரை ரூ.131.09 கோடி அளவிற்கு கூட்டுறவு நிறுவனங்கள் மூலம் தானி ஈட்டுக் கடன்கள் வழங்கப்பட்டுள்ளன.

விவசாயிகளின் விளைபொருள்களை பாதுகாத்து விவசாயிகளின் நலன்காக்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்ட 1,55,300 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட 1141 தானிய சேமிப்புக் கிடங்குகளில் விவசாயிகள் பயன்பெறும் வகையில் தானிய ஈட்டுக் கடன்கள் வழங்கவும், விளைபொருட்களை சேமித்து முழுமையான பயன்பாட்டிற்கு உட்படுத்த வேண்டும் எனவும் அறிவுறுத்தினார்.

சென்னை மாவட்டம் தவிர தமிழ்நாட்டில் உள்ள இதர மாவட்ட.கள் அனைத்தும் வறட்சி மாவட்டங்களாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதனையடுத்து, குறுகிய கால பயிர்க் கடன்களை மத்திய காலக் கடன்களாக மாற்ற உரிய நடவடிக்கை மேற்கொள்ள கூட்டுறவுத்துறை அலுவலர்களுக்கு அறிவுரை வழங்கினார்.

கூட்டுறவு வங்கிகள் சிறப்பாக செயல்பட்டு வரும் சூழ்நிலையில், வைப்புத்தொகை சேகரிப்பு இயக்கத்தை மிகப் சிறப்பாக நடத்தி கூட்டுறவு வங்கிகளின் சேவை அனைத்து தரப்பு மக்களுக்கும் சென்று சேர நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென அறிவுரை வழங்கினார்.

மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகள், நகர கூட்டுறவு வங்கிகள் மற்றும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கங்கள் மூலமாக சுய உதவிக் குழுக்களுக்கு நடப்பாண்டில் ரூ.520 கோடி அளவிற்கு கடன் வழங்கக் குறியீடு நிர்ணயிக்கப்பட்டதில் இதுவரை ரூ.405.69 கோடி அளவிற்கு வழங்கப்பட்டுள்ளது.

வங்கி கணினிமயமாக்கல் பணிகள் குறித்து ஆய்வு செய்து இதர வணிக வங்கிகளுக்கு இணையாக கூட்டுறவு வங்கிகளின் செயல்பாடுகள் இருக்க வேண்டும் என அறிவுரை வழங்கினார்.

பொதுவிநியோகத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் கூட்டுறவுச் சங்கங்களும், கூட்டுறவு நிறுவனங்களும் பெரும் பங்கு ஆற்றி வருகின்றன. குடும்ப அட்டைததரார்களின் விருப்பத்தின் பேரிலும், அவர்களின் தேவையின் அடிப்படையிலும் மட்டுமே பொருள்கள் விநியோகம் செய்யப்பட வேண்டும். குடும்ப அட்டைதாரர்கள் கேட்கும் பொருட்களை உடனுக்குடன் வழங்க வேண்டும் எனவும், அனைத்து பொருட்களும் ஒட்டுமொத்தமாக தான் வாங்க வேண்டும் என கட்டாயப்படுத்தக் கூடாது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதிகாரிகளுக்கு அறிவுவரை வழங்கினார்கள்.

மேலும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் முன்னோடித் திட்டமான உணவு பாதுகாப்பு அளித்திட்ட விலையில்லா அரிசி திட்டத்தில் ஒரு கோடியே 97 இலட்சம் குடும்பங்கள் பயனடையும் வகையில் அரசு ரூ.4900 கோடி மானியமாக வழங்குகிறது. எந்தவித புகாருக்கும் இடமின்றி விலையில்லா அரிசித் திட்டத்தை சிறப்பாக நடத்த வேண்டும் என அறிவுரை வழங்கினார்கள்.

நீலகிரி மாவட்டத்தில் தேயிலை பயிரிடும் சிறு தேயிலை விவசாயிகள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் பொருட்டும், அவர்கள் உற்பத்தி செய்யவும் தேயிலைக்கு நியாயமான விலை கிடைத்திடவும். இண்ட்கோசர்வ் நிறுவனம் செயல்பட்டு வருகிறது. இந்நிறுவனத்தின் மூலம் "ஊட்டி டீ " என்னும் பெயரில் 100 கிராம் எடையுள்ள பாக்கெட்டுகளில் அடைத்து தனியார் நிறுவனங்கள் விற்பனை செய்யும் டீ தூளின் விலையைவிட மிகவும் குறைந்த விலைக்கு நியாயவிலைக் கடைகள் மூலம் பொதுமக்களுக்கு விற்பனை செய்யும் திட்டத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிமுகப்படுத்தி உள்ளார்கள். நடப்பாண்டில் "ஊட்டி டீ" 3780 மெட்ரிக் டன் விற்பனை செய்ய குறியீடு நிர்ணயிக்கப்பட்டதில் இதுவரை 2862 மெட்ரிக் டன் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

தற்பொழுது பொதுமக்கள் விரும்பும் வகையில் நல்ல தரத்துடன் 250 கிராம் பாக்கெட்டுகளில் "ஊட்டி டீ" விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

மேலும், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசுகையில், கூட்டுறவுத்துறை மூலம் நிர்ணயிக்கப்பட்ட அனைத்து குறியீட்டினையும் மார்ச் 2013 மாத இறுதிக்குள் எய்திட திட்டமிட்டு பணிகளை மேற்கொள்ளுமாறு அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

இக்கூட்டத்தில், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறைச் செயலாளர் திருமதி எம்.பி.நிர்மலா, இ.ஆ.ப., கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் திரு.பெ.சீத்தாராமன், இ.ஆ.ப., கூடுதல் பதிவாளர்கள் திரு. இரா. ராஜேந்திரன், திரு.ம.ப.சிவன்அருள், திரு.இரா.கார்த்திகேயன், திரு.இராம.ஜெயம்பாண்டியன், திருமதி வே.நந்தகுமாரி, திருமதி கே.பிரமிளா மற்றும் கூட்டுறவுத்துறை அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை.9**